முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா ஜூன்3 அன்று

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊர் கிளை, உட்கிளை தோறும் சிறப்பாக கொண்டாடிடுவோம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, மே 30-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர். காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே,

சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே, அய்யன் வள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே, உங்கள் பிறந்த நாளில் நின்னை வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக நான்காண்டுகள் சிறப்பான சாதனைகளை புரிந்து ஐந்தாவது ஆண்டில் வெற்றி நடை போட்டு கொண்டிருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் கரங்களை வலுப்படுத்துவோம்.

கழக அரசின் சாதனை திட்டங்களை தமிழக மக்களிடத்தில் சென்றடையும் வகையில் பிரச்சாரம் செய்து "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" தமிழக முதல்வர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்களின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் கழக தோழர்கள் இரவு பகல் பாராது அயராது உழைத்து 2026 - ல் கழக ஆட்சி அமைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் சபதம் ஏற்போம்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழகத்தின் அனைத்து அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் பங்கேற்று இருவண்ணக் கழக கொடி உயர்த்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இனிப்பு, நலத்திட்டங்கள் வழங்கி மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், எழுது பொருட்கள் வழங்கி கண் தானம், இரத்த தானம், அன்னதானம் ஆகிய நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், வட்ட கிளை, உட்கிளை, ஊர் கிளை செயலாளர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171 வது வட்டம், தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா முன்னிட்டு தகவல் தொழில் நுட்ப அணி வட்ட அமைப்பாளர் நா.பால விக்னேஷ் தலைமையில் சென்னை, வள்ளீஸ்வரன் தோட்டத்தில் நல உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, 171வது வட்டச் செயலாளர் துரை பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் கீதா முரளி, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ஆர். கதிரவன், வட்டச் செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா.அன்பு, பா .பொன்னுசாமி, வட்ட துணைச் செயலாளர் அசோக், மயிலை தொகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி வே.கார்த்திக், இர. நாகலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை

இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப் பணி உறுப்பினர்கள் நியமனம்!

சென்னை, மே 30 -

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு துறை இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூக பணி உறுப்பினர்கள் நியமனம் குறித்த அரசின் செய்தி வெளியீடு வருமாறு:

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப்பணி உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர் நீதி குழுமத்திற்கு ஒரு பெண் உட்பட இரண்டு சமூகப் பணி உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.

விண்ணப்பதாரர் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்;

(அல்லது) குழந்தை உளவியல், மனநல மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது துறை சார்ந்த இணையதள முகவரியிலிருந்து (https://dsdcpimms.tn.gov.in) விண்ணப்பத்தாரர் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் 19.06.2025 (வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 010.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி நகராட்சி 7 வது வார்டு சுப்பிரமணி நகர் பாரதிதாசன் தெருவில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் நகர கழக செயலாளர் வி.வினோத்குமார், நிர்வாகிகள் ஜி.எஸ். கணேசன், கே.எஸ்.அசோக்குமார், ஷாம்சுந்தர் , பிரசாத், ஜி.சித்திக், எஸ்.குமரன், பிரவீன்குமார், ரஹீம், வெங்கடேஷ், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டம்

மதுரவாயல் 149வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, மே 30-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம் இன்று (30.05.2025) மாலை 5.30 மணியளவில் ஸ்ரீதேவி குப்பம் பிரதான சாலையில் அமைந்துள்ள எண்.173 வட்டக்கழக அலுவலகத்தில் 149வது வார்டு வட்ட அவைத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ் மதுரவாயல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன் மற்றும் 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ், துணைச் செயலாளர்கள் ஆட்டோ எஸ்.ஆறுமுகம், எம்.குமார், திருமதி.குப்பு ராஜேந்திரன், பொருளாளர் பி.எஸ்.துரைசாமி மற்றும் ஆர்.சிவலிங்கம், கே. சரவணன், எம்.ஏ.வி.சீனிவாசன் முன்னிலையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறுகிறது.

அதுபோது ஜூன் 3ம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், 149வது வார்டுக்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அணியின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடி கள் மற்றும் கழகத் தோழர்கள், கழக செயல்வீரர்கள், பாக முகவர்கள் (BI2), பாக அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் த.ரமேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : 30.05.2025 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 11.00 மணி
இடம் ; தலைமை தபால் நிலையம் எதிரில், தஞ்சாவூர்

கண்டன உரை

- அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள்
- நாடாளுமன்ற, சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள்- இந்நாள் நிர்வாகிகள்

அநீதிக்கு எதிராக அணி அணியாக திரள்வீர்...!

இவண் : தி.மு.க. விவசாய அணி
மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள்- காவிரி டெல்டா மாவட்டங்கள்